முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 734**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**02.10.2021**, சனிக்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
ஞானிகளின் துணைகொண்ட தேசிகனே
வானவர்கள் ஆற்றலாக உமக்கு அருள
வரங்களை வாரி உலகோர்க்கு அருளும் ஞானதேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி தன்னை
ஆசிதந்து யானே உன் சக்தியாக
அகிலத்தில் அன்பர்களுக்கு அருளிவர
3. வருகின்ற திக்கில் எல்லாம்
வல்லமைபட உன் பேரில் நடக்கும் தர்மத்தில்
தருகின்றேன் ஆற்றலை உலக மக்களுக்கு
தர்மமாக தானமாக சர்வசக்தியாக
4. ஆகவே திக்கெல்லாம் ஆறுமுகன் யான் உந்தன் வேண்டலுக்காய் இறங்கி
அகிலத்தை அன்பர்களை காத்து வருகின்றேன்
மகிழவே உன் நாமஜெபத்தை சொல்லி
மாதர்மம் எங்கு நடக்கின்றதோ அகிலத்தில் அந்த பகுதி எல்லாம் ஆறுமுகன் என் தயவால் காக்கப்படும் என்பேன்
5. என்கவே கட்டுக்கடங்காத பேரிடர்
எந்த திக்கினை அழித்த போதும்
துன்பம் அகற்றும் அரங்கன் உன்
தூய தர்மம் உன் பேரில் எங்கு நடக்கின்றதோ
6. நடக்கின்ற இடங்கள் அனைத்திலும்
ஞானபண்டிதன் யான் இறங்கி காத்தருள்புரிவேன்
இடர்களை எல்லாம் விரட்டி உன் வேண்டலுக்காய்
இனிதே ஆறுமுகன் யான் அன்பர்களை காத்து
7. காத்து அரங்கன் உன் தர்மத்தையும் கொள்கையையும்
கலியுகத்தில் நிலைபெற செய்து அருள்புரிவேன்
அருளாக அறமாக ஆக்கமாக அகிலத்தின் மகா சூட்சும சக்தியாக
வரம்தந்து யானே உன்னுள்இருக்க வடிவேலன் என்னருள்பெற கலியுகத்தில் விரும்புமக்கள்

8. மக்களெல்லாம் என் அறுபடை வீடை சார்ந்து செல்வதுபோல்
வல்லமைமிக்க வாழும் ஞானி நீ இருக்கும் தடமான
பெருமைமிக்க ஏழாம் படைவீட்டை
பிசகில்லா சென்று கண்டுவணங்கினால் போதுமப்பா

9. அப்பனே அவர்களுக்கு பரிபூரண பெரும்பேற்றுக்குண்டான பரமானந்த ஞானம்
அரங்கன் உன் கரம்பட தரணியில் தீட்சையாக தந்து யானே அருள்புரிவேன்
தவசியே அரங்கனே ஞானமாய் இந்த கலியுகத்தில் அருளும் ஞானதேசிகனே
என் பலமோடு நீ உலகமாற்றம் செய்து மகிழ்வுறுவாய்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–